**திருப்பத்தூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண் : 3762/அ1/2024, நாள். .10.2024**

******

**பொருள்:** தமிழ்நாடு அமைச்சுப்பணி - திருப்பத்தூர் மாவட்டம். கஸ்பா - A ஆம்பூர். அரசு உயர்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.க.பாபு என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை:**

1. அரசாணை எண்.151/பள்ளிக் கல்வித் துறை நாள்.09.09.2022.
2. திருப்பத்தூர் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள். ந.க.எண்.1765/அ1/2012, நாள். 23.11.2012
3. திருப்பத்தூர் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 4289/அ1/2017, நாள். 17.11.2017
4. திருப்பத்தூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள். ந.க.எண். 673/அ1/2023, நாள்.13.10.2023
5. ஆம்பூர் கஸ்பா - A அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியரின் கடித ந.க.எண். 90/2024, நாள்.21.10.2024.

******

திருப்பத்தூர் மாவட்டம், கஸ்பா - A. ஆம்பூர் அரசு உயர்நிலைப்பள்ளியில், இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.க.பாபு என்பவருக்கு பார்வை (4) இன்படி பதிவெழுத்தர் பதவியிலிருந்து இளநிலை உதவியாளராக தற்காலிக அடிப்படையில் பதவி உயர்வு ஆணை வழங்கப்பட்டது.

இளநிலை உதவியாளர் பணியிடத்தில் தற்காலிக அடிப்படையில் பதவி உயர்வு ஆணை வழங்கப்பட்டுள்ள கீழ்காண் பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிவரன்முறை செய்யக் கோரி பார்வை (5) இல் காணும் கடிதத்தின் வாயிலாக கருத்துருக்கள் பரிந்துரை செய்து பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கீழ்கண்ட இளநிலை உதவியாளருக்கு அவரின் பெயருக்கு எதிரே கலம் 5 ல் குறிப்பிட்டுள்ள நாளில் பணி வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் | முதன் முதலில் பணியில் சேர்ந்த பதவி மற்றும் நாள் | இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | திரு.க.பாபு,<br>இளநிலை உதவியாளர்,<br>அரசு உயர்நிலைப்பள்ளி,<br>கஸ்பா - A ஆம்பூர் | இரவுக்காவலர்<br>24.11.2012 மு.ப | 20.10.2023<br>மு.ப | 20.10.2023<br>மு.ப |

மேற்படி பணியாளர் பணிவரன்முறை செய்த நாள் முதல் தகுதிகாண் பருவத்தினராக கருதப்படுவார். அன்னார் இரண்டாண்டு காலத்திற்குள் தகுதிகாண் பருவத்தினை முடிக்க வேண்டும் எனவும், இக்காலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது

பணிவரன்முறை ஆணை குறித்து சார்ந்த பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என சம்மந்தப்பட்ட சார்நிலை அலுவலர்/தலைமையாசிரியருக்குத் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு - அசல் பணிப்பதிவேடு மற்றும்
பணிவரன்முறை ஆணை

முதன்மைக் கல்வி அலுவலர்(பொ)
திருப்பத்தூர் மாவட்டம்

24/10/24.

பெறுநர்
சார்ந்த பணியாளர் (உரிய வழியாக)
நகல்
தலைமையாசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
கஸ்பா - A ஆம்பூர்,
திருப்பத்தூர் மாவட்டம்.